2000 மே 2] [திரு. சோ. பாலகிருஷ்ணன்]

அவர்களெல்லாம் விரிவான முறையில் நிவாரணம் பெறுகின்ற வகையில் அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். குறிப்பாக, குடிதண்ணீர்ப் பிரச்சினை என்பது மிகப் பெரிய பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கிறது என்பதனைத் தெரிவித்து, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தனிக் கவனம் எடுத்து, இராமநாதபுரம் மாவட்டத்தின் குடிதண்ணீர்ப் பிரச்சினைக்கு உடனடியாக உத்தரவிட்டு, லாரிகள் மூலம் தண்ணீர் supply செய்வதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றில் இரண்டு அல்லது ஒன்றில் மூன்று என்று சொல்வதைப்போல, நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு சிறப்புக் கவன ஈர்ப்பு அல்லது ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்துவிட்டு, அதிலே மூன்று பிரச்சினைகளைப்பற்றி இங்கே விளக்கியிருக்கிறார்கள். ஒன்று, ஆடு மேய்த்த நண்பர்களுடைய திடீர் சாவு. மற்றொன்று, இராமநாதபுரம் மாவட்டத்திலே ஏற்பட்டுள்ள வறட்சி. மூன்றாவதாக, ஏர்வாடியில் இஸ்லாமியர்கள் தனிப்பட்ட முறையில் நடத்துகின்ற மருத்துவ மையங்களில் ஏற்பட்டுள்ள சாவுகள் — இஸ்லாமியர்கள் தனிப்பட்ட முறையில் நடத்துகின்ற பாதுகாப்பு மையங்களில் ஏற்பட்டுள்ள சாவுகள். இந்த மூன்றையும் பற்றி அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

முதலில் சூறாவளிக் காற்றினால் ஏற்பட்ட நிலை என்ன என்பதை விளக்கி விடுகிறேன். இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி வட்டம், இதம்பாடல் குருப்பைச் சேர்ந்த திரு. கருப்பையா கோனார் அவர்களது மகன் ஆனந்தன், மற்றொரு கருப்பையா அவர்களுடைய மகன் முருகேசன் மற்றும் பரமக்குடி வட்டம், பொதுவாக்குடி கிராமத்தைச் சேர்ந்த சுந்தரக் கோனார் என்பவர் மகன் முத்து, ஏர்வாடியைச் சேர்ந்த திரு. கருப்பையா கோனார் மகன் உடையார் ஆகியோர் ஆட்டுக்கிடை அமைப்பதற்காக இராமநாதபுரம் வட்டம், உத்திரகோசமங்கை அருகிலே மேலசித்தை கிராமத்திற்குச் சென்றுள்ளார்கள். 25-4-2000 அன்று இரவு மேற்படி கிராமத்தில் ஆட்டுக் கிடை அமைத்துவிட்டு, அன்று பெய்த மழை காரணமாக அருகிலே உள்ள தனியாருக்குச் சொந்தமான சேதுமாணிக்கம் உயர்நிலைப் பள்ளிக் கட்டடத்திலே தங்கினார்கள். அப்பொழுது கட்டடத்தின் ஒரு பகுதி மழையினால் இடிந்து விழுந்ததினால் இடிபாடுகளில் சிக்கி, திரு. கருப்பையா கோனார் மகன் ஆனந்தன் என்பவரும், மற்றொரு கருப்பையா என்பவரது மகன் முருகேசன்

என்பவரும் இறந்துவிட்டார்கள். மேலும், சுந்தரக்கோனார் அவர்களுடைய மகன் முத்து என்பவரும், கருப்பையா அவர்களுடைய மகன் உடையார் என்பவரும் காயமடைந்துள்ளார்கள்.

இறந்துவிட்ட இந்த இரண்டு பேருடைய குடும்பங்களுக்குத் தலா 15 ஆயிரம் ரூபாய் வீதம் 29ஆம் தேதி காலையில் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. அது போதுமானதல்ல, இன்னும் அதிகம் கொடுத்திருக்கலாம் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். காயம் அடைந்தவர்களுக்கும் ஏதாவது செய்ய வேண்டுமென்று சொன்னார்கள்.

இது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே கலந்து பேசி காயமடைந்தவர்களுக்கு உரிய நிவாரணம் வழங்கப்படும் என்று கூறிக்கொள்கிறேன்.

பொதுவாக இதுபோன்ற விபத்துகளில் அரசின் சார்பில் ஏற்கெனவே 3 ஆயிரம், 5 ஆயிரம் ரூபாய் என்று கொடுக்கப்படுவதற்கு மாறாக, இப்பொழுது 15 ஆயிரம் ரூபாய் என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும், எதிர்க்கட்சித் தலைவர் கேட்டுவிட்டார் என்பதற்காக இந்த 15 ஆயிரம் ரூபாயோடு மேலும் 10 ஆயிரம் ரூபாய் சேர்த்து, தலா 25 ஆயிரம் ரூபாயாக அவர்களுக்குத் தரப்படும் என்று நான் இங்கே கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஏர்வாடியிலே இஸ்லாமியர்கள் நடத்துகின்ற அந்த மையங்களில் அவர்களுடைய அசிரத்தையின் காரணமாக, அலட்சியத்தின் காரணமாக சுகாதாரக் குறைவு ஏற்பட்டு அதனால் சிலர் மாண்டுபோக நேரிட்டிருக்கிறது. அதுபற்றி மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே குறிப்புகள் கேட்கப்பட்டு இருக்கின்றன. அந்தக் குறிப்புகள் வந்தவுடன் அதுபற்றி மேல் நடவடிக்கை எடுக்கத் தேவைப்பட்டால் அமைச்சர்களே சென்று பார்வையிட்டு, தக்க பரிகாரம் செய்வார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-40

இராமநாதபுரம் மாவட்டத்திலே வறட்சி நிலை குறித்துக் குறிப்பிட்டார்கள். 1999-ல் அந்த மாவட்டத்திலே மழை 278 மில்லி மீட்டர்தான் பெய்திருக்கிறது. பொதுவாக, ஒவ்வோர் ஆண்டும், சராசரியாக அந்த மாவட்டத்திலே 827 மில்லிமீட்டர் மழை பொழிவது வழக்கம். அதற்கு மாறாக 1999-லே 278 மில்லிமீட்டர் மழைதான் பெய்திருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவரும் அரசுக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கின்றார்.

உடனடியாக வறட்சி நிவாரணப் பணிகளுக்கு ஒரு கோடி ரூபாய்க்கு மேலாக, கிட்டத்தட்ட 1¼ இலட்சம் ரூபாய்க்கு ஒரு கணக்கு எழுதி உடனடியாக அனுப்ப வேண்டுமென்று நிவாரணப் பணிகளுக்காகக் கடிதம் எழுதியிருக்கிறார். அதுவும் அரசாங்கத்தினுடைய பரிசீலனையிலே உள்ளது என்பதை நான் தெரிவித்துக்கொண்டு, இராமநாதபுரம் மாவட்டத்தில் மாத்திரமல்ல, வேறு பகுதிகளிலும் தண்ணீருக்காகக் கஷ்டப்படுகின்ற மக்களுடைய தண்ணீர்த் தேவையைத் தீர்ப்பதற்கு அரசு போர்க்கால நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. மேலும் எடுக்கும் என்பதையும் தெரிவித்து, சிறப்பாகவும், குறிப்பாகவும் இராமநாதபுரம் மாவட்டத்தில் தனிக் கவனம் இந்த வறட்சி நிலை குறித்து செலுத்தப்படும் என்பதை அறிவித்து அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1¼ இலட்சமா, கோடியா? முதலமைச்சர் படிக்கும்போது 1¼ இலட்சம் என்றீர்கள். 1¼ கோடியா?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: *125 இலட்சம்.*

(ஆ) கடமலைக்குன்று L.M.S. மேல்நிலைப் பள்ளி மாணவன் மரணம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து பத்மநாபபுரம் கடமலைக்குன்று L.M.S. மேல்நிலைப் பள்ளி மாணவன் கொலை செய்யப்பட்டது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி. வேலாயுதன், திரு. சி. ஞானசேகரன் ஆகியோர் அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. வேலாயுதன் அவர்களைப் பேச அழைக்கின்றேன்.

திரு. சி. வேலாயுதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் சமீபகாலமாக நல்ல அமைதியான முறையில் மக்கள் வாழ்ந்துகொண்டு வருகிறார்கள். அதற்குக் காரணம் காவல் துறையினுடைய நேர்மையான நடவடிக்கை. கன்னியாகுமரி மாவட்ட மக்களுக்கு நல்ல படிப்பறிவு உள்ளதும் இன்னொரு காரணமாகும். ஆனால், அதைவிட மிகவும் நல்லமுறையில் அமைதியாக என்னுடைய பத்மநாபபுரம் சட்டமன்றத் தொகுதி இருக்கின்றது என்று சொன்னால் அது மிகையாகாது. அங்கு ஜாதி மதப் பிரச்சினைகள் ஆங்காங்கே சற்று தலை தூக்கும்போது, அமைதிப்படுத்தி எந்தப் பிரச்சினையும் இல்லாமல் கொண்டு செல்வதற்காக அனைத்து சமய ஜாதிகளைச் சேர்ந்த 11 பேர் கொண்ட ஒரு குழு அமைத்து சிறிய